மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 285/2024 |
| பெயர் | : | சண்முகவசந்தராஜா (PW1/LW1) |
| த/பெ. | : | கணேசன் |
| வயது | : | 29 |
| கிராமம் | : | புதியம்புத்தூர் |
| தாலுகா | : | ஓட்டப்பிடாரம் |
| Calling | : | பீல்டு ஆபீசர் (ஸ்ரீராம் பினான்ஸ்) |

(Accused Vanniyaraj is present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6 th day of March 2026.

<u>முதல் விசாரணை</u>

1)நான் புதியம்புத்தூரில் குடியிருந்து ஸ்ரீராம் பினான்ஸ் பீல்டு ஆபீசிராக வேலை செய்து வருகிறேன். சாட்சி பரமசிவனை தெரியும். அவர் எனது சித்தப்பா ஆவார். கடந்த 07.06.2023 ஆம் தேதி மதியம் 3.20 மணியளவில் எனது சித்தப்பா சுப்பிரமணியன் வீட்டு இறுதிசடங்கிற்கு இரு சக்கர வாகனமான TN 69 BX 8600 மேலமடம் ஜங்சனில் கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி வரும்போது ஓட்டப்பிடாரத்தில் இருந்து புதுக்கோட்டை நோக்கி வந்த வண்டி Yamaha FZX என்ற வண்டி எனது சித்தப்பா வண்டியில் மோதி விபத்து ஏற்பட்டதாக பொன்ராஜ் என்பவர் போன் செய்து சொன்னார்.நான் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன்.அப்போது எனது சித்தப்பாவிற்கு இடது காலில் காயம், நாடியில் காயம் ஏற்பட்டிருந்தது.108 ஆம்புலன்சுக்கு போன் செய்து தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.இரண்டு நாட்கள் கழித்து புதியம்புத்தூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம்.என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான் (**மேற்படி புகார்மனு அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது சித்தப்பா பரமசிவன் என்பவர் எனது அப்பாவுடன் பிறந்தவரா என்றால் இல்லை. எனது சித்தப்பா பரமசிவன் என்பவரின் வண்டியின் பதிவு எண் தெரியுமா என்றால் TN 69 BX 8600 ஆகும். புகார் மனுவில் TN 38 BX 8600 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிர்புறமாக ஓட்டி வந்த வண்டியின் பதிவு எண் தெரியாது என்றால் சரிதான். விபத்தை நான் கேள்விப்பட்டு தான் வந்தேன் என்றால் சரிதான். விபத்தை பொன்ராஜ் என்பவர் போன் செய்து சொன்னார். அப்போது நான் அலுவலகத்தில் இருந்தேன். அலுவலகத்தில் இருந்து விபத்து நடந்த இடத்திற்கு வருவதற்கு 5 யிலிருந்து பத்து நிமிடங்கள் ஆனது. நான் தான் எனது சித்தப்பாவை 108 ஆம்புலன்சில் அழைத்து சென்றேன். 108 ஆம்புலன்சுக்கு நான் போன் செய்யவில்லை.

2) எனது சித்தப்பா கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி மூன்று மூக்கு சந்திப்பில் திரும்பும் போது விபத்து ஏற்பட்டது. கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி திரும்பும் போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வரும் வாகனம் தெரியாது என்றால் சரியல்ல. எனது சித்தப்பா மேற்படி மூன்று முக்கில் வேகமாக வந்து திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஜங்சன் அதிக போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த விபத்தில் மேற்படி இரண்டு வாகனங்களை தவிர்த்து கூடுதலாக ஒரு வாகனம் விபத்தில் ஈடுபட்டது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விபத்தில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டது தெரியுமா என்றால் போலிசார் சொல்லி தெரியும். புகார் மனுவை போலிசார் சொல்ல சொல்ல காவல்நிலையத்தில் வைத்து நான் எழுதினேன் என்றால் சரிதான்.

3)தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு ஒரு ஆம்புலன்சு மூலம் எனது சித்தப்பாவை அழைத்து சென்றேன். எனது புகார் மனுவில் 108 ஆம்புலன்சில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.எனக்கு எதிரியை தெரியாது என்றும் எதிரியின் வாகனத்தை தெரியாது என்றும் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.மேற்படி விபத்தில் மூன்றாவதாக ஒரு வாகனம் மோதி என்னுடைய சித்தாப்பாவிற்கு காயம் ஏற்பட்டது என்றும் அந்த வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது என்றும் விபத்து நஷ்டஈடு பெறுவதற்காக வேண்டி எதிரியின் வாகனத்தை காட்டி எதிரியின் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. மூன்றாவதாக வந்த வாகனம் மோதி எனது சித்தப்பாவிற்கு காயம் ஏற்பட்ட பின்பு கீழே கிடந்த எனது சித்தப்பாவின் வாகனத்தில் எதிரியின் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றால்

சரியல்ல.விபத்து நடந்தன்று நான் எனது நிறுவனத்தில் பணியில் இருந்தேன் என்றும் சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும் அரசு மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.அதனால் தான் பின் யோசனையின் பேரில் 9 ஆம் தேதி புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.